# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 205/2015 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | முனியப்பன் | நாள் | 23.11.2023 |
| தகப்பனார் பெயர் | மாரிமுத்து | | |

**வாதி தரப்பில் பி,வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-**

1) வாதி எந்த சொத்திற்க்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், சூரப்பள்ளி கிராமம் சர்வே எண்.252 மற்றும் அதன் பட்டா எண்.1076 க்கு உரிய சொத்திற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் ஒரே சர்வே எண்ணில் 0.18- 1/2, சென்ட் நிலத்திற்கு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) மேற்படி சர்வே எண்.252 ன் உட்பிரிவுகள் என்னவென்று சொல்லி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. வாதி தரப்பில் சூரப்பள்ளி கிராம நிர்வாக அலுவலர், சூரப்பள்ளி பஞ்சாயத்து தலைவர் ஆகியோர்களை இவ்வழக்கில் சாட்சியாக வாதி விசாரித்துள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால், தெரியும்.

3) மேற்படி சூரப்பள்ளி கிராம நிர்வாக அலுவலர், சூரப்பள்ளி பஞ்சாயத்து தலைவர் ஆகிளோர்கள் சூரப்பள்ளி கிராமம் சர்வே எண்.252/5 ல் வாதியின் வீடு உள்ளதாக சாட்சியம் அளித்துள்ள விவரமும், மேற்படி சங்கதி தொடர்பாக ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ள விவரமும், எனக்குதெரியும் என்றால், சரிதான். ஆனால் அவை தவறானவை. அவ்வாறு வீடு எதுவும் இல்லை.

4) என் தரப்பில் பி.வா.சா.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள மாரியப்பன் த/பெ. மாரிமுத்து என்பவரின் இறப்பு சான்றிதலை குற்றவியல் நீதிமன்றத்தில் மனுசெய்து அதன்படி பெற்றுள்ளோம் என்றால், சரிதான். மேற்படி இறப்பு சான்றிதழின் அடிப்படையில் தான் மாரியப்பனின் வாரிசு சான்றிதழ் கோரி வட்டாட்சியரிடம் மனுசெய்தோம் என்றால்

சரிதான். நான் தவறான தகவலின் அடிப்படையில் பெற்ற இறப்பு சான்றிதழின் அடிப்படையில் மேற்படி வாரிசு சான்றிதழ் கோரியதால்தான் வாட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து தற்போது வரை எங்களுக்கு வாரிசு சான்றிதழ் வழுங்கப்படவில்லை என்றால், சரியல்ல. வாதியும், வாதியின் மகனும் அதை ஆட்சேபித்ததால் வருவாய் துறையினர் வழங்க மறுத்துவிட்டனர். அதை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளோம்.

5) அவ்வாறு வருவாய் துறையினர் வாரிசு சான்றிதழ் வழங்க மறுத்த நிலையில் இதே நீதிமன்றத்தில் வாதியையும், அவரது மகனையும் தரப்பினராக சேர்க்காமல் அரசு தரப்பினரை மட்டும் சேர்த்து மேற்படி மாரியப்பனின் வாரிசு சான்றிதழ் கோரி அ.வ.எண்.107/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வாதியும், வாதியின் மகனும் தங்களையும் தரப்பினர்களாக சேர்த்துக்கொள்ள சொல்லி மனு தாக்கல் செய்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு அவர்களும் மேற்படி வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

6) இவ்வழக்கில் சர்வே எண்.252/5 ல் வீடு உள்ளதா என பார்க்க நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி தள்ளுபடி உத்தரவிற்கு எதிராக நான் தற்போது வரை மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால், சரிதான்.

7) சர்வே எண்.252/8, மற்றும் சர்வே எண்.252/9 ஆகியவற்றில் உள்ள நிலங்கள் வாதிக்கு பட்டாபடி பாத்தியப்பட்டவை என்றால், சரிதான். ஆனால் அவர் மேற்படி பட்டாவை நாளது தேதியிலிருந்து 9 மாதங்களுக்கு முன்புதான் பெற்றுள்ளார். நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி சர்வே எண்களில் உள்ள நிலங்களுக்கு பல

வருடங்களுக்கு முன்பிருந்தே வாதியின் பெயரில் பட்டா உள்ளது என்றாலும், சரியல்ல.

(வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா..சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.